இந்தச் சூழ்நிலையை எல்லாம் எண்ணிப் பார்த்து அடுத்தாற்போல் ஒரு முக்கியமான மசோதாவை நிறைவேற்றவேண்டும், இன்று கடைசி நாள் என்பதை எண்ணிப் பார்த்து இதில் யாருமே பேசாது இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி வைப்பார்களேயானால் மிக விரைவில் இந்த மசோதாவினை முடித்துக்கொண்டு அடுத்த மசோதாவிற்குச் செல்ல வாய்ப்பிருப்பதால் எல்லோரும் இதை ஏற்று பொறுக்குக்குழுவிற்கு விடுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் 139 (1)-வது விதிக் கிணங்க இச்சட்டமுன்வடிவின் பொறுப்பிலுள்ள மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களை இக்குழுவின் உறுப்பினராக நான் நியமிக்கிறேன்.

(5) அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(அ) அலுவல் வரிசையில் மாற்றம்—தொடர்ச்சி

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Speaker, Sir, I move—

'That item III—Government Motion be taken up before item (1) under 'Government Bills'.

The motion was put and carried.

(ஆ) 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின்கீழ் விவர அட்டவணைக்கான வரைவுத் திருத்தம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71) 431 (3) பிரிவின்கீழ் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால், மேற்படி சட்டத்தின் II -ஆம் விவர அட்டவணையை மாற்றிச் செய்யக் கருதப்பட்டுள்ள கீழ்க் காணும் வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

வரைவுத் திருத்தம்.

"1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/71), II -ஆம் விவர அட்டவணையில் உள்ள இரண்டாவது வரம்பு நிபந்தனையின் கீழ்க்கண்டுள்ள அட்டவணையில் 17 (1) விதியில் IX -வகுப்பு என்பதும் அதன் தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட வேண்டும்."

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 பிப்ரவரி 13

தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியினால் தொழில் வரி விதிக்கப் படுவதற்காக, 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 15/1971) II ஆம் விவர அட்டவணையின் 17 (1)-வது விதியிலும், மேற்படி சட்டத்தின் 132-வது பிரிவிலும், வரி வீதங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்படி விதியை ஒட்டி ரூ. 600-க்கு மேற்பட்டும் ரூ.1,200-க்கு உட்பட்டும் அரை ஆண்டு வருவாய் பெருவோர் ஒன்பதாம் வகை வரி விதிப்புத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ரூ. 3 என்ற பேரளவுத் தொகைக் குட்பட்டு, அரை ஆண்டு தொழில் வரி விதிக்கப்படும்.

மதுரை மாநகராட்சி மன்றம் 25—9—1971 நாளிட்ட தனது 514-வது தீர்மானத்தில் அரை ஆண்டிற்கு ரூ. 1,200-க்கு குறைவாக வருவாய் பெறும் எல்லா நபர்களுக்கும் (அரசிதழ் பதிவுபெறு அரசு ஊழியர் உட்பட) தொழில் வரி விதிப்பாகிய ரூ. 2-லிருந்து, 1972-73-ம் ஆண்டு முதல் விலக்களிக்க அரசைக் கேட்டுக்கொண்டது.

இது குறித்து பரிசீலித்தபின்னர், சென்னை மாநகராட்சியின் இதுபோன்ற கோரிக்கை ஒன்று ஏற்கனவே ஏற்கப்பட்டுள்ளதால், 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் II -ம் விவர அட்டவணையில் 17 (1) வது விதியில் ஒன்பதாவது வகையைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில் வரி விதிப்பினின்று 1—4—1972 முதற்கொண்டு விலக்களிக்க அச்சட்டத்தின் 116 ஆம் பிரிவு மூன் றும் விலக்கின்கீழ் அரசு அனுமதி அளித்தது. மேற்படி ஆணையைத் தொடர்ந்து, அவர்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு ஏற்றவாறு 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் II-வது விவர அட்டவணையில் 17 (1) வது விதியைத் திருத்த தற்போது கருதப்பட்டுள்ளது. அதற்குச் சட்டமியற்ற வேண்டியது அவசியமில்லை. ஆனால், அதற்குப் பதிலாக 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 431 (5) பிரிவின் கீழ் மேற்படி சட்டத்தின் II -வது விவர அட்டவணையில் திருத்தக் கருதியுள்ள வரைவுத் திருத்தம் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

இதற்கிணங்க நான் இதற்கு அவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.